# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.HMOP.No. 127/2021**

**Deposition of witness of Respondent – R.W.1 (நவமணி)**

**27.02.2025**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் குன்றான்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம் வட்டார இயக்க மேலாண்மை அலகில் வட்டார இயக்க மேலாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2019ஆம் ஆண்டு பரிட்சை எழுதி வேலைக்கு சேர்ந்தேன்.

2. எனக்கு மாத சம்பளம் ரூ.16,500/– ஆகும். எனது மகள் பெயர் கயல்விழி. எனது மகளுக்கு நான் திருமணம் செய்து வைத்தபோது என்ன வயது என்றால் 19 வயது. எனது மகளை எனது தம்பிக்கு திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. எனது தம்பிக்கு திருமணத்தின்போது என்ன வயது என்றால் 29 இருக்கும். எனது மகளுக்கும், எனது தம்பிக்கும் இடையே 10 வருடங்கள் வயது வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான்.

4. மனுதாரர் மீது நானும், எனது மகளும் சேர்ந்து இலுப்பூர் காவல் நிலையத்தில் 2024ஆம் ஆண்டு மே மாதம் ஒரு புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அந்த புகாரில் மனுதாரர் மீது இலுப்பூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு மனுதாரர் சிறைக்காவலில் இருந்தார் என்றால் சரிதான்.

5. அந்த குற்ற வழக்கில் எனது மகளுக்கு ஆதரவாக சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை, சாட்சியாக தான் கையெழுத்து போட்டேன். 21.02.2022ஆம் தேதி கீரனூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான், என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.19 நான் கொடுத்த புகார் மனுவின் நகல் தான். ம.சா.ஆ.19 புகார் மனுவில் எனது மகனுடைய விபத்து குறித்து மனுதாரருக்கு எனது தோழிகள் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. நான் எனது மகனின் விபத்து குறித்து மனுதாரரிடம் நேரடியாக தெரிவித்தேனா என்றால் வேறு நபர் மூலம் தெரிவித்தேன். வேறு நபர் மூலம்

தெரிவித்ததாக எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. ம.சா.ஆ.19 புகார் மனுவில் எனது மகன் இறந்தபிறகு நானும் எனது கணவரும் ஒன்றாக இருந்து வந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் இறப்பிற்கு முன்பு நானும், எனது கணவரும் பிரிந்து இருந்ததாக ம.சா.ஆ.19 புகார் மனுவின் மூலம் தெரியவருகிறது என்றால் சரிதான்.

8. எனது மகளின் திருமணத்திற்கு மனுதாரரை சேர்ப்பதற்காக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீட்டில் பஞ்சாயத்து பேசினோமா என்றால் பேசினோம். அந்த பஞ்சாயத்து 2019ஆம் ஆண்டு நவம்பர் மாத வாக்கில் இருக்குமா என்றால் இருக்கும். 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நானும் மனுதாரரும் பிரிந்து இருந்த காரணத்தால் தான் அந்த பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் இல்லை. எனது மகளின் திருமணத்திற்காக பேசப்பட்டது.

9. என்ன காரணத்திற்காக பஞ்சாயத்து பேசினோம் என்றால் திருமணத்திற்காக பேசப்பட்ட பஞ்சாயத்து தான். எனக்கும், மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் தான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மூலம் மனுதாரரை திருமணத்திற்கு அழைப்பதற்காக பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல.

10. அந்த பஞ்சாயத்து பேசப்பட்ட அன்று, எனது தம்பி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முன்னிலையில் மனுதாரரை செருப்பால் அடித்தார் என்றால் இல்லை.

11. எனது தம்பி மனுதாரரை செருப்பால் அடித்தாரா என தெரிந்துகொள்வதற்கு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரை சாட்சியாக விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

12. எனது மகள் திருமணத்திற்கு மனுதாரரை அழைக்கவும் இல்லை, அவர் வரவும் இல்லை என்றால் அழைத்தேன் அவர் தான் வரவில்லை. அவர் திருமணத்திற்கு என்ன காரணத்தால் வரவில்லை என்றால் அவரது தங்கை மகனுக்கு எனது மகளை திருமணம் செய்து கொடுக்க கேட்டு கொடுக்கவில்லை என்பதால் திருமணத்திற்கு வரவில்லை.

13. ம.சா.ஆ.19 புகார் மனுவில், எனது மகளின் வளைகாப்பிற்கு அனைத்து செலவுகளும் நான் தான் செய்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 மருத்துவ ரசீதுகளில் எனது பெயர் உள்ள மருத்துவ ரசீதுகள் உள்ளன என்றால் தவறாக வைத்திருப்பேன்.

14. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 02.01.2025ஆம் தேதி இறந்தார். எனது தந்தை இறப்பிற்கு மனுதாரரை நான் அழைக்கவில்லை என்றால்

சரிதான். எ.ம.சா.ஆ.2 ஆவணம் என்னால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

**S/d – C.Rajesh, B.A.B.L.,**
சார்பு நீதிபதி,
கீரனூர்.